# 25

# அஹ்லுல் பைத்களை அறிந்து கொள்வோம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினரே அஹ்லுல் பைத்கள் என அழைக்கப்படுகின்றனர்.

நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியர், அருமை மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா, நபி ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மருமகனும் ஒன்றுவிட்ட சகோதரருமான அலி ரழியல்லாஹு அன்ஹு, சிறிய தந்தைகளான ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹு, அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, பேரப்பிள்ளைகளான ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு, ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு போன்றோர் அஹ்லுல் பைத்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களின் சிறப்புக்களையும் இஸ்லாத்திற்காக இவர்கள் ஆற்றிய பணிகளையும் அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களின் முன்மாதிரி களைப் பின்பற்றி நடப்பதுடன் அவர்களை நேசிப்பதும் அவசியமாகும்.

## பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்கள் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் மகளாக நுபுவ்வத்துக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்காவில் பிறந்தார்கள். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைத் திருமணம் செய்தார்கள். இவர்களுக்கு ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தனர். பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தைப் பேணுதலாகக் கடைப்பிடித்து ஒழுகினார்கள். இவர்கள் கடும் வறுமையிலும் பொறுமையாக இருந்தார்கள். விருந்தினர்களை விருப்பத்துடன் உபசரித்தார்கள். தம்மிடம்

இருப்பதை வாரி வழங்கினார்கள். ஒருமுறை தன்னிடமிருந்த கம்பளிப் போர்வையை யூதன் ஒருவனுக்கு விற்றார்கள். அப்போது ஒரு யாசகன் வந்த போது, அப்பணத்தை அவனுக்கே வழங்கி விட்டார்கள்.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபாவில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது குறைஷிக் காபிர்களில் சிலர் அவர்களது மேனியில் ஒட்டகையின் குடல்களைப் போட்டு விட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தலையை உயர்த்த முடியாமல் ஸுஜூதிலேயே இருந்தார்கள். அப்போது அங்கே வந்த மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா தன் கரத்தினாலேயே அவற்றை அகற்றினார்கள்.

தொழுகையிலும் நோன்பு நோற்பதிலும் அதிக காலத்தைக் கழித்தார்கள். அன்பும் ஆதரவும் ஈகையும் இரக்கமும் இவர்களிடம் காணப்பட்டன. ஆடம்பரத்தை வெறுத்து எளிமையை விரும்பினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தனது மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் 'அகில உலகப் பெண்களின் தலைவி' என்றும் 'சுவர்க்கத்துப் பெண்களின் தலைவி' என்றும் பாராட்டப் பட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தாகி ஆறு மாதங்களின் பின்னர் தனது இருபத்தெட்டாவது வயதில் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மதீனாவில் வபாத்தானார்கள்.

**பயிற்சி**

சுருக்கமான விடை தருக.

1. அஹ்லுல் பைத்கள் யாவர்?
2. பாத்திமா (ரழி) அவர்கள் எப்போது பிறந்தார்கள்?
3. பாத்திமா (ரழி) அவர்களின் குணப்பண்புகள் மூன்றினை குறிப்பிடுக.
4. பாத்திமா (ரழி) அவர்கள், நபியவர்களால் எவ்வாறு புகழப்பட்டார்கள்?
5. பாத்திமா (ரழி) அவர்கள் எத்தனையாவது வயதில் மரணித்தார்கள்?